### ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் திறக்கப்படுவது வெறும் பெரியார் படமல்ல!

# சிரஞ்சீவித் தத்துவம் சீரிளமைத் தன்மையால் உலகாளப் போவதற்கான முன்னூட்டத் தடம்!



எவ்வளவு நல்ல தத்துவமானாலும் அதை முன்னெடுக்கும் தலைமை தகுதி வாய்ந்ததாய் அமைந்தால் மட்டுமே அந்தத் தத்துவம் வெற்றிபெறும். அப்படி ஒரு தத்துவத்தையும் தலைமையையும் காலம் பெரியாரின் வடிவத்தில் தமிழர்களுக்கு வழங்கியது. அந்தக் காலக் கொடையை அதிகாரத்தில் அமரவைத்தார் அண்ணா. அவருக்குப்பின் அந்தத் தத்துவத்தை தளராமல் அரியணையில் அமரவைத்தார் கலைஞர்.



**ஆ.இராசா எம்.பி.**
துணைப் பொதுச் செயலாளர்
தி.மு.க.

எம்.ஜி.ஆர். என்ற திரைபிம்பத்தை ஏந்தி அந்தத் தத்துவத்தை இன எதிரிகள் சிதைக்க முயன்றபோது ஆட்சிக் கட்டிலை இழந்தும் காவல் அரணாய் காத்துநின்றவர் அவர். அதிகாரத்திற்கு வந்த போதெல்லாம் தத்துவத்தை அரியணை ஏற்றியவரும் அவரே. அவருக்குப்பின் தத்துவம் என்னாகும்? கவலை கொண்டவர்கள் இருக்கத்தான் செய்தார்கள்; உலகெங்கும் நூறாண்டுகள் ஒரு தத்துவம் கோலோச்சியது இல்லை என்பதால்! கவலை கொண்டவர்கள் இன்று கர்வம் கொள்கிறார்கள். தத்துவம் தகுதிமிக்க தலைவனின் குடையின் கீழ் பத்திரமாய் இருப்பதால்! அதற்கு தமிழ் எல்லைக்குள் அண்ணாவால் அரியாசனம் ; இந்திய எல்லைக்குள் கலைஞரால் சரியாசனம். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் மாமனிதரால் அது உலகமயமாகி இன்று உச்சம் தொட்டது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் திறக்கப்படுவது வெறும் படமல்ல; சிரஞ்சீவித் தத்துவம் சீரிளமைத் தலைமையால் உலகாளப் போவதற்கான முன்னூட்டத் தடம்!

**வாழ்க நீ எம்மான் இவ்வையத்து நாட்டிலெல்லாம்.**

### மாணவர்களின் உயர்வுக்காகப் பாடுபடும்

# நல்லாசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது ஆசிரியர் தின வாழ்த்துகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, செப். 6-**

**ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், “மாணவர்களின் உயர்வுக்காகப் பாடுபடும் நல்லாசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது ஆசிரியர் தின வாழ்த்துகள்’’ என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பெற்றோர்கள் ஆசிரியர்களை நம்பிப் பிள்ளைகளை ஒப்படைக்கிறார்கள்! பிள்ளைகள் பெற்றோரை விட ஆசிரியர்கள் சொல்வதையே அதிகம் நம்புகிறார்கள்...

அந்த மாணவர்களுக்குத் தமிழை, அறத்தை, அரசியலை, அறிவியலை என அனைத்தையும் கற்பித்து அவர்களின் உயர்வுக் காகப் பாடுபடும் நல்லாசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது ஆசிரியர் தின நல் வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள், அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இங்கிலாந்து நாட்டில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில், தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து, ஆற்றிய உரையினை அகன்ற திரையில் திரையிட்ட போது.... பார்வையாளர்கள் வரிசையில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்ட நிர்வாகிகள் கோ.கண்ணன், எஸ். பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், மெய்யூர் சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.


